**செய்தி வெளியீடு எண். 132** **நாள் 30.03.2015**

**தமிழகத்தில் 4 ஆண்டுகளில் 12.7 இலட்சம் குடும்ப நல அறுவை சிகிக்சைகள், 14.2 இலட்சம் கருத்தடை வளையங்கள் பொருத்தி சாதனை!**

**குடும்ப நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம்!**

**குடும்பநலத்துறை விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்!**

**குடும்ப நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய சாதனையாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பாராட்டி பரிசு கேடயம் வழங்கினார்.**

தமிழக அரசு குடும்ப நலத்துறை சார்பில் குடும்ப நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய மருத்துவமனைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு விருது வழங்கும் விழா மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர், டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளில் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி முதலிடம் வகிக்கும் மருத்துவமனைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு பரிசு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது,

“**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் நல்லாசியோடு குடும்பநலத் திட்டம் தமிழகத்தில் திறம்பட சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குடும்பநலத் திட்டத்தில் பணித்திறன் அடிப்படையில் 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்களிடையே உரையாற்றும் வாய்ப்பினை பெற்றதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று விருதுகளை பெருகின்ற அனைத்து அலுவலர்கள், மருத்துவமனைகள், தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரை நான் மனதார பாராட்டுகின்றேன்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க பல்வேறு முன்னோடித் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நோய் தடுப்பு மற்றும் நோய் சிகிச்சை என்ற இரு சேவைகளும் தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் கிடைப்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை உறுதி செய்கிறது.

தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு திட்டங்களையும் செயல்பாடுகளையும் மத்திய அரசு, உலக சுகாதார நிறுவனம், யுனிசெப் போன்ற அமைப்புகள் பிற மாநிலம் மற்றும் பிற நாடுகளிலிருந்து பார்வையிட வருகை தரும் குழுவினர் என அனைவரும் பாராட்டுகின்றனர். அண்மையில் மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா அவர்கள் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது எனப் பாராட்டியுள்ளார்.

தமிழகத்தில் நாளொன்றுக்கு அரசு மருத்துவமனைகளில் சராசரியாக 6 இலட்சம் வெளி–நோயாளிகள் மற்றும் 85 ஆயிரம் உள்–நோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது. சுமார் ஒரு இலட்சத்திற்கு மேலான பணியாளர்கள் இத்துறையில் பணியாற்றுகின்றனர்.

2006–07 முதல் 2010–11 முடிந்த ஐந்து ஆண்டுகளில் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு 14257.46 கோடி ரூபாய் ஆகும். ஆனால், இந்த அரசு

பொறுப்பேற்ற பிறகு அதாவது 2011–12 முதல் 2015–16 வரையிலான காலத்திற்கு ஒதுக்கிய மொத்த நிதி ஒதுக்கீடு 32091.17 கோடி ரூபாய் ஆகும். இது கடந்த ஆட்சிகாலத்தில் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூபாய் 14257.46 கோடியை விட, ரூபாய் 17,833.71 கோடி அதிகமாகும். இது கடந்த ஆட்சி காலத்தில் செய்த ஒதுக்கீட்டினை விட 124 விழுக்காடு அதிகமாகும். சுகாதாரத் துறையில் தமிழக அரசின் சாதனைகளுக்காக கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 489.41 கோடி மத்திய அரசு ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தொற்றா நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை, 2.41 கோடி நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த பரிசோதனைகள், 1.87 கோடி நபர்களுக்கு சர்க்கரை நோய் பரிசோதனை, 84 இலட்சம் பெண்களுக்கு கர்ப்பபை புற்றுநோய் பரிசோதனை மற்றும் 1.04 கோடி பெண்களுக்கு மார்பக புற்று நோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் ரூபாய் 265.56 கோடி செலவில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு, 122 சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

குடும்பநலத் துறை, ஆரம்ப காலத்தில் மருத்துவம் மற்றும் பொது சுகாதார இயக்ககங்களின் ஒரு பிரிவாக மட்டும் தான் செயல்பட்டு வந்தது. பின்னர் 1983 முதல் குடும்பநலம் தனி இயக்ககமாக மாற்றப்பட்டு, இத்திட்டம் சமுதாயம் பங்கு பெறும் மக்கள் திட்டமாக, பிற துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- குடும்பநல திட்டத்தின் முக்கிய நோக்கம் தாய்சேய் நலத்தை மேம்படுத்துவதின் மூலம், தாய் – சேய் மரணத்தை குறைப்பதுடன் மக்கள் தொகை பெருக்கத்தை நிலை நிறுத்துவதாகும். குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. சுகாதாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் வகுத்துள்ள மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை (Millennium Development Goals) தமிழ்நாடு ஏற்கனவே அடைந்துள்ளது.
- குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்துவதில் "குறியீடு அடிப்படையிலான" செயல்பாட்டிலிருந்து "சமுதாய தேவைகளின் மதிப்பீட்டு முறையிலான" செயல்பாடாக முதன் முதலில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது. இதை பின்பற்றி பிற மாநிலங்களும் செயல்படுத்துகின்றன. 2000ம் ஆண்டுக்கான தேசிய மக்கள் தொகை கொள்கையில் அடைய வேண்டிய இலக்கான 2.1 மொத்த கருவள விகிதத்தை தமிழ்நாடு 1996ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட்டது. 2013ம் ஆண்டில் மொத்த கருவள விகிதமான 1.7 என்ற மிகக் குறைந்த நிலையை தமிழகம் அடைந்துள்ளது. மேலும் கடந்த 8 ஆண்டு காலமாக இதே நிலையில் நீடித்து வருவது பாராட்டுக்குரியது.
- சிசு மரண விகிதத்தைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய மாநிலங்களில் இரண்டாவது மிகக் குறைந்த அளவான 21 என்ற நிலையை தமிழ்நாடு அடைந்துள்ளது. குடும்பநலத் துறையின் சிறந்த செயல்பாட்டினால் மிகை பிறப்பு வரிசை என்று சொல்லக் கூடிய மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுடைய தாய்மார்களின் எண்ணிக்கை தமிழகத்தில் 8.5 விழுக்காடாக குறைந்துள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளில் குடும்பநல அறுவை அரங்குள் சுகாதார நிலையங்களில் 341–லிருந்து 378–ஆகவும், அரசு மருத்துவமனைகளில் 242–லிருந்து 255–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 12.7 இலட்சம் குடும்பநல அறுவை சிகிச்சைகளும், 14.2 இலட்சம் தாய்மார்களுக்கு கருத்தடை வளையங்களும் பொருத்தி, இந்திய அளவில் தமிழக குடும்பநலத் துறை சாதனை புரிந்துள்ளது. இச்சாதனையை எய்திட சிறப்பாக பணியாற்றிய குடும்பநலத் துறை அலுவலர்கள் அனைவரையும் இந்நேரத்தில் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். 2.4 இலட்சம் தாய்மார்களுக்கு மருத்துவ

ரீதியில் பாதுகாப்பான கருக்கலைப்பு செய்யப்பட்டுள்ளன. 534 மருத்துவர்களுக்கும், 812 செவிலியர்களுக்கும் பாதுகாப்பான எம்.வி.ஏ (Manual Vacuum Aspiration Techique) முறையிலான பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. 2,109 மருத்துவர்களுக்கும், 7,328 கிராம சுகாதார செவிலியர்களுக்கும் மற்றும் 3,548 செவிலியர்களுக்கும் கருத்தடை வளையம் பொருத்தும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- 259 மருத்துவர்கள் 255 செவிலியர்களுக்கு லேபராஸ்கோப்பு முறையில் குடும்பநல கருத்தடை அறுவை சிகிச்சை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 577 மருத்துவர்களுக்கு மினிலேப் கருத்தடை அறுவை சிகிச்சை முறையை பயன்படுத்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. நவீன குடும்பநல ஆண் கருத்தடை சிகிச்சையில் 269 மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், தூத்துக்குடி மாவட்ட கடற்கரை பகுதிகளில் உயர் பிறப்பு விகிதத்தை குறைக்க ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டம் 8 வட்டாரப் பகுதிகளில் ரூபாய் 36.32 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.
- “நாம் இருவர் நமக்கு இருவர்'' என்ற கோட்பாட்டின்படி ஆண் / பெண் என்ற பாலின பாகுபாடின்றி குழந்தைபேறு ஏற்கும் வண்ணம் தமிழக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை குடும்பநல இயக்ககம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் தற்போது 21 ஆக உள்ள சிசு மரண விகிதத்தை 2017–ஆம் ஆண்டுக்குள் 13–ஆக குறைக்கவும் மற்றும் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் 68–லிருந்து 44–ஆக குறைப்பதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து முனைப்புடன் செயலாற்ற வேண்டும். தொடர்ந்து தமிழகம் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக திகழ அனைவரும் சிறப்பாக செயல்படவேண்டும் என கேட்டுக்கொண்டு மீண்டும் பரிசு பெற்ற உங்கள் அனைவரையும் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் சார்பில் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன் என பேசினார்.

விழாவில் குடும்ப நலத்துறையின் சார்பில் “Vital Statistics of Tamilnadu and India” என்ற புத்தகத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட, துறையின் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார். மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்புச் செயலர், டாக்டர். பி. செந்தில் குமார், இ.ஆ.ப., தேசிய சுகாதார குழும இயக்குநர், டாக்டர். சி. என். மகேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார இயக்க திட்ட அலுவலர், திரு. எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் டாக்டர். அ. சந்திரநாதன், மருத்துவக் கல்வி துறை இயக்குநர், டாக்டர். எஸ். கீதாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறையின் இயக்குநர், டாக்டர் கே. குழந்தைசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். குடும்ப நலத்துறை இயக்குநர், டாக்டர். ஆர். கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை மற்றும் திட்ட விளக்க உரையும், துணை இயக்குநர், திரு. எஸ். முத்துசாமி நன்றியுரையும் ஆற்றினர். மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் அனைத்து மாவட்ட இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை.